[3rd November 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கொஞ்ச காலத்திற்கு முன் கால்நடை நாட்டு வைத்தியம் அதிகமாக இருந்தது. இப்போது அதிகமாக இல்லை என்று சொல்லலாம். இப்போது அதற்காகத் தான் ஸ்டாக்மென்-கோர்ஸ் படிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Pupil-teacher ratio in elementary schools

820-D Q.—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. R. Viswanathan) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the pupil-teacher ratio adopted in elementary schools in the State ; and

(*b*) the minimum number of pupils required over and above the strength for a single teacher for appointing an additional teacher?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 35 pupils in average attendance per teacher.

(*b*) The formula adopted is as follows :—

For the first 35 pupils in average attendance—Ist teacher.

For the second slab of average attendance from 36 and up to 70—2nd teacher.

For the third slab of average attendance from 71 and up to 105—3rd teacher.

And so on in slabs of 35 pupils in terms of overall average attendance.

* SRI N. K. PALANISAMI : ஸார், இரண்டு வாத்தியார்கள் இருக்கக்கூடிய ஒரு பள்ளிக்கூடத்தில், அதில் ஒரு வாத்தியார் பெண் வாத்தியாராக இருந்து அவர் மெட்டர்னிட்டி லீவில் போயிருந்தால் அதற்குப்பதிலாக வாத்தியார்கள் போடுவதில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியிருக்கும்போது ஒரு வாத்தியாரே 70 பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு படித்துக்கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதையும் சர்க்கார் அறிவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவ்விதமொன்றுமிருப்பதாகத் தெரியவில்லை.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே சாதாரணமாகப் பள்ளிக்கூடங்களில் ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று நியமிக்க வேண்டும் என்று பொதுக் கொள்கை இருக்கும் போது 35-லிருந்து 70 பிள்ளைகள் வரை இருந்தால் இரண்டு ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்று இருப்பதால், 35 மாணவர்களிலிருந்து 70-வது மாணவர்கள் ஆகும் வரையில் ஒரு ஆசிரியரே ஏற்றுக்கொள்வது என்பது நடைமுறைக்கு ஒவ்வாத முறையில் இருக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பொதுவாக இதைப்பற்றி ஒரு தவறான கருத்து இருந்து வருகிறது. 35 மாணவர்கள் வரை ஒரு ஆசிரியர் போடவேண்டும் என்றும் 70 மாணவர்கள் இருந்தால் இரண்

3rd November 1958]

டாவது ஆசிரியரை போட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி விளக்கமாக சமீபத்தில், அதாவது 2—4—1948-ல் 639-ம் நம்பராக வெளியாகியுள்ள ஜி.ஓ.-வில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 35 மாணவர்களுக்கு மேல் ஒரு மாணவர் இருந்தாலும் அதாவது 36-வது மாணவர் இருந்தாலும் இரண்டாவது ஆசிரியரை நியமிக்கலாம், அதேபோல் 70 மாணவர்களுக்கு மேல் 71-வது மாணவர் இருந்தாலும் 3-வது ஆசிரியரை நியமிக்கலாம் என்று விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் பார்த்தால் ஒரு வகுப்பில் 10 பேர்கள் இருந்தால் அதற்கும் ஒரு ஆசிரியர் போட வேண்டிய கஷ்டமான நிலைமை ஏற்படுகின்றது. இதைப்பற்றி விசாரித்து ரிப்போர்ட் அனுப்பும்படி டி.பி.ஐ.-யிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்ததும் அதை ஆலோசித்துப்பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI S. LAZAR : ஸார், இப்போதுள்ள விதிமுறைகளினால் நடைமுறையில் பல பள்ளிக்கூடங்களுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன என்று சர்க்காருக்கு ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா ? அவ்விதம் எத்தனை பள்ளிக்கூடங்களிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

MR. SPEAKER : What is the complaint?

SRI S. LAZAR : After the introduction of this scheme, a number of complaints have been made by the various managements. Is there any proposal before the Government to look into the grievances of managements and redress them?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not understand what he means by ' a number of complaints '. Of course, there has been an agitation that this teacher-pupil ratio should be reduced, i.e., instead of 1 : 35, it should be 1 : 20. As a matter of fact, even before this change, local boards schools had this teacher-pupil ratio. The only thing is, we have now introduced it in aided schools also.

MR. SPEAKER : Whenever hon. Members refer to complaints, they must mention the dates on which they were made and by whom. That will help the Hon. Ministers a great deal in replying to questions.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸார், இந்த கல்வி முறை அமுலுக்கு வந்ததிலிருந்து சில அரிஜனப் பள்ளிக்கூடங்களிலிருந்து பல ஆசிரியர்கள் வேலையிழந்து இருக்கிறார்கள். ஆகவே கட்டாயக் கல்வி முறை கொண்டு வருவது வரையிலும் இவர்களுக்கு வேலை கிடைப்பதற்குத் தகுந்த வகையில் இந்த விதிகளைத் தளர்த்திக்கொடுக்கச் சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்குத் திட்டவட்டமாக உத்தர விடப்பட்டிருக்கிறது. இப்போது வேலையில் இருக்கும் யாரையும் வெளியில் அனுப்பக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் யாரும் வேலை இழக்க மாட்டார்கள்.

SRI D. S. AUTHIMOOLAM : ஸார், இந்த ராஜ்யத்தில் கிட்டத்தட்ட சுமார் 20 ஆயிரம் ஆரம்ப ஆசிரியர்கள் ட்ரெயினிங் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்குத் தகுந்த வகையில் இந்த மாணவர்கள் எண்ணிக்கையை 25 என்ற ரேஷியோவில் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

[3rd November 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : 20 ஆயிரம் போகள் பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்கின்ற புள்ளிவிவரம் கனம் அங்கத்தினர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது என்று தெரியவில்லை. அது மிகவும் தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : ஓராசிரியர் பள்ளிக்கூடங்களாக இருந்து வருகின்ற சுமார் 80, 90 பள்ளிக்கூடங்களில் சரியானபடி அங்குள்ள டெப்யூடி இன்ஸ்பெக்டர் போய் பார்வையிடாத காரணத்தினால் கூடுதலாக ஆசிரியர்கள் நியமிப்பதில் தாமதம் ஏற்படுகின்றது. ஆகவே எந்தெந்தப் பள்ளிக்கூடங்களில் நியமிக்கவேண்டும் என்பதைக் கணக்கெடுத்து அதில் ஆசிரியர்களைப் போடுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON SRI C. SUBRAMANIAM : ஓராசிரியர் பள்ளிக் கூடம் என்றால் எப்போதும் ஒரு ஆசிரியர் தான் இருக்கவேண்டும் என்ற தவறான கருத்து இருந்து வந்தது. இப்போது விளக்கமாகச் கூடுதல் எண்ணிக்கையுள்ள மாணவர்கள் இருந்தால் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க லாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI V. SANKARAN : ஸார், இப்போதிருக்கின்ற மாணவர்களுடைய விகிதாச்சாரத்தின் படி ஆசிரியர்கள் அதிகமாக இருப்பதாலும், மேற் கொண்டு அதிகப்படி ஆசிரியர்கள் தேவையாக இராததாலும் இன்னும் ஒரு சில வருஷங்களுக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மூடிவிட்டால் ஆசிரியர்களுடைய வேலை யில்லா திண்டாட்டத்தைப் போக்குவதற்கு முடியுமல்லவா ? இதை அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த அடிப்படையில் இப்போதும் பரிசீலனை செய்யப்பட்டுதான் வருகிறது. எந்த அளவுக்கு ஆசிரியர்கள் தேவையோ அந்த அளவுக்கு ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the latest Government Order regarding the teacher-pupil ratio has not yet been circulated among most of the aided schools in the City of Madras and that representations have been made by the managements of the aided schools to the authorities concerned in the matter? The authorities also plead ignorance of the Government Order and have prevented appointment of fresh teachers as per the orders contained in the Government Order.

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry that they are not aware of the Government Order. I am sure, this question here would serve some purpose. I shall, however, find out whether the Government Order has not been sent to the schools and if it has not been sent, I shall see that it is sent to them.

SRI J. MATHA GOWDER : ஸார், புதிய பள்ளிகளை ஏற்படுத்தும் போது கூட சமவெளிகளில் 500 ஜனத்தொகை இருக்கவேண்டும் என்று இருக்கும்போது மலைப் பிரதேசத்தைப் பொருத்த வரையில் 300 ஜனத் தொகை இருந்தால் போதும் என்று வைத்திருக்கும்போது, இதே முறையில் ஆசிரியர்-மாணவர் வீதாசாரத்தில் மலைப் பிரதேசத்திலே 35 என்று வரையறுத்திருப்பதை அதற்குக் குறைவான எண்ணிக்கை வைத்து அந்த அளவு எண்ணிக்கையுள்ள மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையை அமைக்க அரசாங்கம் முன் வருமா ?

3rd November 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : குளிர்ப் பிரதேசத்தில் வேலையை சமவெளியில் செய்வதை விடத் திறமையாகச் செய்யலாம். ஆகையால் இதை மலைப் பிரதேசத்தைப் பொருத்த வரையில் உயர்த்து வதைப் பற்றி யோசிக்க முடியும்.

MR. SPEAKER : இப்போது 10 மணியாகிறது. இன்னும் 5 கேள்விகள் இருக்கின்றன. அவைகளை இன்னும் 5 நிமிட நேரம் எடுத்துக் கொண்டு முடித்து விடலாம்.

Certain concessions to Christians among Backward Classes, Most Backward Classes and ex-Criminal Tribes.

* 820-E. *Q.*—SRI V. SUBBIAH (on behalf of Sri T. Veluchami) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

ஹிந்து ஹரிஜனங்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளில் சில கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருப்பது போல் ஹிந்து பின் தங்கிய வகுப்பினர், ஹிந்து மிகவும் பின்தங்கிய வகுப்பார், ஹிந்து மாஜி குற்ற பரம்பரையினர் இவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளில் சில கிருஸ்தவ பின்தங்கிய வகுப்பார், கிருஸ்தவ மிகவும் பின்தங்கிய வகுப்பார், கிருஸ்தவ மாஜி குற்றப் பரம்பரையினர் இவர்களுக்கு விஸ்தரிக்க ஏதேனும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : The position is as follows :—

Backward Classes.—There is no proposal under the consideration of this Government to extend to the Backward Class converts the concession now enjoyed by the Hindu Backward Classes.

Most Backward Classes.—Educational concessions are given to the Most Backward Classes without reference to the religion to which they belong.

Ex-Criminal Tribes.—So far as the Harijan Welfare Department is concerned, converts from ex-Criminal Tribes are given all educational concessions enjoyed by the Hindu ex-Criminal Tribes.

As regards Education Department, the question of extending the fee concessions to the converts from ex-Criminal Tribes is under the consideration of the Government.

SRI A. GOVINDASAMY : பின் தங்கிய வகுப்பிலிருந்தும், மிகவும் பின் தங்கிய வகுப்பிலிருந்தும் மதம் மாறிய கிருஸ்தவர்களு டைய பொருளாதார நிலையை அனுசரிக்கும்போது, அவர்கள் நிலை மிகவும் கஷ்டமானதாக இருக்கிறது. மதம் மாறிய ஆதித் திராவிடர் களுக்குக் கொடுப்பது போல இவர்களுக்கும் எல்லாச் சலுகைகளையும் கொடுப்பதற்கென்ன ? இதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கொடுக்க சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நான் சொன்ன பதிலிலே இதைத் தான் சொல்லியிருக்கிறேன். மிகவும் பின் தங்கிய வகுப்பினர் களிலிருந்து மதம் மாறிய கிருஸ்தவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது, பின் தங்கிய வகுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுவது போல.